1. தகவல் கோரல் (தொடர்ச்சி).

இ. நகராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தைப் பற்றி நான் கேட்கவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நகராட்சித் தேர்தல்கள் எப்ரலிலே நடைபெறும் என்று அறிவித்தார்கள். அப்ளிகேஷன் போட்டிருக்கிறார்கள். இப்போது, ஜூன், ஜூலை மாதங்களில் நடக்கும் என்று சொல்லுகிறார்கள். எது உண்மை என்று தெரிவித்தால், வேலை செய்வதை நிறுத்தி வைக்கலாம்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு காளிமுத்து, ஏற்கனவே, உள்ளாட்சிகளுக்கு ஏப்ரல் மாதம் தேர்தல் நடைபெறும் என்று சொன்னார். ஆனால், இப்போது காரைக்காலிலே போய், அது ஜூன், ஜூலைக்குப் போகும் என்று சொல்லியிருக்கிறார். இன்னும் ஒரு படி மேலே போய் சொன்னார், ஏப்ரல் மாதம் முதல் தேதி, இந்தச் சென்னை மாநகர மேயர் பதவி ஏற்பார் என்று. ஏப்ரல் முதல் தேதி என்ன என்று தெரியும். அப்படித் தான் மக்களைப் பண்ணப் பார்த்தாரா என்று தெரியவில்லை. அப்படியென்றால், தேர்தல் ஏப்ரலில் நடைபெறுமா? ஜூன், ஜூலைக்குப் போகுமா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும்.

இரண்டாவது, சபை நடக்கும்போது ஏப்ரலில் நடக்கும் என்று சொல்லிவிட்டு, காரைக்காலில் உட்கார்ந்து, பாண்டிச்சேரி மண்ணுக்குப் போன உடனே மனம் மாறி அது ஜூன், ஜூலைக்குப் போகும் என்று சொல்வது நியாயமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னது அமைச்சர் அவர்களின் காதில் விழுந்தது. பதில் சொல்வதும், சொல்லாததும் அவர் விருப்பம். உட்காருங்கள்.

5. அறிக்கை அளித்தல்

அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பெறும் பஞ்சப்படி உயர்வு குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி தமிழக அரசு அறிவித்த ஊதிய விகிதங்கள் சராசரி வாழ்க்கைச் செலவுப் புள்ளி 320 என்ற அடிப்படையில் அமையப் பெற்றன என்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இச் சராசரி 8 புள்ளிகள்